**பொது சுற்றறிக்கை இல 01-18/2015**

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ளூர் கருத்தரங்கை நடாத்துதல்.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் நடாத்தப்படும் உள்ளூர் கருத்தரங்கானது பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் நடாத்தப்படுதல் வேண்டும். இது தனிப்பட்ட உத்தியோகத்தர்களது செயல் திறனை மதிப்பீடு செய்து அவர்களை ஊக்குவிக்கவும், உள்ளூர் மட்டத்தில் காணப்படும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்வுகளைக் காண்பதற்கும், களத்தில் பணிபாற்றும் உத்தியோகத்தர்களுக்கிடையிலான நல்லுறவை விருத்தி செய்யவும் பொதுமக்களுடைய புகார்களுக்கு தீர்வு காணவும் நடாத்தப்படுகின்றது.

1. உள்ளூர் கருத்தரங்கானது பின்வரும் நோக்கங்களை நிறைவேற்ற நடாத்தப்பட வேண்டும்.
    - பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பொது சுகாதார மருத்துவ மாது ஆகியோரால் வெளிக்களத்தில் நடைமுறைபடுத்தப்படுகின்ற செயற்பாடுகளை சுகாதாரதுறை சாராத மற்றைய உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து திட்டமிடவும் ஒருகிணைக்கவும், இது வழங்கப்படுகின்ற சேவைகளை திறனுடையதாகவும் தரமுடையதாகவும் மாற்றும்,
    - செயற்பாடுகளை கண்காணிக்க - சேவை வழங்கும் தனிநபர்களின் செயல் திறனை பெறப்பட்ட தரவுகள் மற்றும் மேற்கொள்ளப்பட மேற்பார்வை அறிக்கைகளின் அடிப்படையில் ஆய்வு செய்தல். இக்கருத்தரங்கு குறைபாடுகளை அடையாளம் கண்டு விவாதித்து எதிர் காலத்தில் நிவர்த்திசெய்ய சந்தர்ப்பம் வழங்கும்.
    - இனவிருத்தி, தாய்நலன், சிசுக்களின் நலம், யௌவனம் மற்றும் இளம்பராயத்தினரது சுகாதாரம், குடும்ப திட்டமிடல், சுற்றுச்சூழல் மற்றும் தொழில்சார் பிரச்சினை மற்றும் வேறுதொடர்புடைய மக்கள் பிரச்சினைகள் என்பவற்றை மதிப்பீடு செய்ய,
    - சேவை வழங்கும் போது ஏற்படும் பிரச்சினைகளை ஒருமித்து தீர்ப்பதற்கான வழிமுறைகளை அடையாவம் காணுவதற்கு,
    - வெளிக்களத்தில் பணிபுரிபவர்களின் கூட்டு முயற்சியை மேம்படுத்த,

2. கருத்தரங்கு நடாத்துவதற்கான திகதியும் நேரமும்.
    - ஒவ்வொரு மாதமும் குறிபிட்ட திகதியில் நடத்தப்பட வேண்டும்.
    - வருட ஆரப்பத்தில் உள்ளூர் கருத்தரங்கிற்கான திகதியும் நேரமும் அடையாளம் காணப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரியிடம் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.
    - ஏதாவது மாற்றம் ஏற்படுத்தப்படின் ஒருவார காலத்திற்கு முன்னதாகவே சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் தொடர்புடைய மற்றையவர்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டும்.
    - இச் செயற்பாட்டிற்கு அரை நாள் ஒதுக்கப்படவேண்டும். வெளிக்கள செயற்பாடுகள் அல்லது கிளினிக் செயற்பாடுகளின் பின் ஆரம்பிப்பது சிறந்தது.

3. பங்கேற்பு

கீழ்வரும் உத்தியோகத்தர்களினது பங்கேற்பு கட்டாயமானது,

- பகுதிக்குரிய பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர், மேற்பார்வை பொது சுகாதார மருத்துவமாது மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் (நிரந்தர/ பதில்கடமை/ மேலதிக்ககடமை உத்தியோகத்தினரும் கட்டாயமாகப் பங்கேற்ற வேண்டும்)
- பகுதிக்குரிய பொது சுகாதார பரிசோதகர் மற்றும் அப்பொது சுகாதார பரிசோதகரது பகுதிக்குள் அடங்குகின்ற சகல மருத்துவமாதுக்கள்.
- சுகாதாரவைத்திய அதிகாரி தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் கட்டாயம் பற்குபற்ற வேண்டும்.
- மற்றைய தொடர்புடைய பிராந்தியத்திற்குரிய அதிகாரிகள் கிராம சேவைகள், சமூர்த்தி அலுவலர், தன்னார்வகுழுத் தலைவர்கள் (உ+ம் தாய்மார்கழகம்)
- தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் வேறு தொடர்புடைய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் மற்றைய துறை சார்ந்த அலுவலர்கள்.

4. செயல்முறை

- உள்ளூர் கருத்தரங்கு பொது சுகாதார பரிசோதகரது மட்டத்தில் நடாத்தப்பட வேண்டும். இக்கருத்தரங்கு பகுதிக்குரிய பொதுச் சுகாதார பரிசோதகரால் ஏற்பாடு செய்யப்பட்ட வேண்டும்.
- இக்கருத்தரங்கு ஆனது பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர் மற்றும் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஆகியோரால் கூட்டாக தலைமைதாங்கப்படும். பகுதிக்குரிய பொது சுகாதார பரிசோதகர் கருத்தரங்கை நடாத்தி செல்வார். செயலாளராக நியமிக்கப்படும் பொது சுகாதார மருத்துவமாது கூட்டறிக்கை எழுதுவதற்கு பொறுப்பாக இருப்பார். செயலாளர் பதவி வருடாந்தம் சுழற்சிமுறையில் வழங்கப்படும்.
- இக்கூட்டறிக்கை சுகாதார வைத்திய அதிகாரியின் மாதாந்த கருத்தரங்கிற்கு அனுப்பப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும்.
- சுகாதார வைத்திய அதிகாரி கிரமமான முறையில் உள்ளூர் கருத்தரங்குகள் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

5. செயற்பாடுகள்.

கீழ்வரும் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும்.

- பொது சுகாதார மருத்துவமாதுக்கள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஆகியோரது செயல் திறன்கள் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குறிகாட்டிகள் மற்றும் மேற்பார்வை அறிக்கைகள் பாவிக்கப்பட வேண்டும். அவர்களுக்குரிய கடைமைகளை நிறைவேற்றுவதில் அவர்களுடைய பலம், பலவீனம் என்ன அடையாளம் காணப்பட வேண்டும். ஆடையாளம் தீர்வுகளை காணப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகளைை விவாதித்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான கருத்துக்களை வழங்கும் பொறுப்பு பொதுச் சுகாதார மருத்துதாதி மேற்பார்வை பொது சுகாதார மருத்துமாது மற்றும் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தொடர்பான பதிவேடுகள்/அறிக்கைகள்/மற்றும் மேற்பார்வை அறிக்கைகள் மதிப்பீடு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் வைத்திருக்கப்பட வேண்டும்.
- சேவையை வழங்கும் திறனை அதிகரிப்பதற்கான உள்ளூர் மட்டத்தில் கலந்துரையாடல் நடாத்தப்பட வேண்டும்.

  (உ+ம்) குறைகள் அடையாளம் காணப்பட்ட பாடசாலை பிள்ளைகளில் தொடர் தரிசிப்புக்கள், விசேட தேவை உடைய குடும்ப விபரங்கள் பகிர்ந்து கொள்ளுதல் சிகிச்சை நிலைய (Clinic) பிரச்சனைகள்.
- அடுத்த மாதத்திற்கான முற்காரிய கிரமப் படலத்தை தயாரிக்கும் போது உள்ளூர் கருத்தரங்கில் செய்யப்பட்ட கலந்துரையாடல் மற்றும் திட்டங்களுக்கேற்ப தயாரிக்கப்பட வேண்டும்.
- உள்ளூர்மட்டத்தில் அடையாளம் காணப்பட்ட சிறப்பு ஆய்வுகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்படுவதுடன் பதிவுகள் பேணப்பட வேண்டும்.
- சிறப்பாக குழுவாக வேலைசெய்யும் திட்டங்கள் ஊக்குவிக்கப்படுகின்றது.

6. பொதுவான அறிவுறுத்தல்கள்

- உள்ளூர் கலந்துரையாடலின் கூட்டறிக்கை அடுத்த மாத கலந்துரையாடலுக்கு முன்னிலைப்படுத்தப்பட்டு கலந்துரையாடுவதற்காக வாசிக்கப்பட வேண்டும்.
- பொது சுகாதார பரிசோதகரது அல்லது பொது சுகாதார மருத்துமாது பதவி வெற்றிடம் காணப்படின் எவ்வாறு உள்ளூர் கலந்துரையாடல் நடாத்தவேண்டும் என சுகாதார வைத்திய அதிகாரி தீர்மானிக்க வேண்டும். மாதாந்தம் உள்ளூர் கலந்துரையாடல்கள் நடப்பதை உறுதி செய்து சுகாதார வைத்திய அதிகாரியின் கடமை ஆகும்.
- ஊள்ளூர் கலந்துரையாடலின் சுருக்கம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

- இக்கலந்துரையாடலில் ஈடுபடுவதன் மூலம் ஏதேனும் இலாபமீட்டக்கூடிய அல்லது தனிப்பட்ட நன்மை அடையக்கூடிய ஒருவர் (தனிப்பட்ட நபர்) உள்ளூர் கலந்துரையாடலில் பங்குபற்ற அனுமதிக்கப்படலாகாது.
- சுகாதார வைத்திய அதிகாரி ஊழியர் மதிப்பீடு (Staff appraisal) செய்யப்படுகையில் உள்ளூர் கலந்துரையாடல் செயற்பாட்டு முன்னேற்றமும் உள்ளடக்கப்பட வேண்டும்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்,

சுகாதார அமைச்சு.